ஆயிரம் விளக்குத் தொகுதிக்கு எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றம்!

‘திராவிட மாடல்’ ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மூலம் - இன்றும் என்றும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினே ஆட்சி செய்கிறார்!

சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் – நா.எழிலன் பேச்சு!

சென்னை, பிப்.20-

சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் ஆயிரம் விளக்கு தொகுதி உறுப்பினர் டாக்டர். நா.எழிலன் பேசுகையில் திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மூலம் இன்றும் என்றும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினே ஆட்சி செய்கிறார் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் ஆயிரம் விளக்கு தொகுதி உறுப்பினர் டாக்டர் நா.எழிலன் பேசியதாவது :-

கண் சிமிட்டுவதற்குள் ஐந்தாண்டுகள் முடிவடைந்து விட்டது. முதல் தலைமுறை சட்டமன்ற உறுப்பினரின் குரலாக இங்கு நிற்கிறேன். பல வரலாற்று சிறப்புமிக்கத் தருணங்களை நம் சட்டமன்றம் அரங்கேறியது. நீதிக் கட்சி முதல் திராவிட மாடல் ஆட்சி வரை சட்டமன்ற நூற்றாண்டு விழாவை கொண்டாடினோம். நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படத்தை திறந்து கலைஞர் நூற்றாண்டை கொண்டாடினோம். (மேசையைத் தட்டும் ஒலி) தந்தை பெரியாரின் மாணவன், பேரறிஞர் அண்ணாவின் தம்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தோழர், பேராசிரியர் பெருந்தகை அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடினோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுநர்கள் வரலாம்; ஆளுநர்கள் போகலாம். ஆனால், மக்கள் மன்றமே உயர்வானது என்று உலகிற்கு உரைத்ததை சட்டமன்றத்தில் நாம் கொண்டாடினோம்.

திராவிட மாடல் ஆட்சியை நாம் கொண்டாடுவோம்!

ஜனநாயக அடிப்படையில் நம் சட்டமுன்வடிவுகள் ஆளுநரால் தடை ஏற்படும்போது நம் திராவிட மாடல் முதல்வர் சட்டப் போராட்டம் நடத்தி நம் சட்டமுன்வடிவிற்கு வெற்றி பெற வைத்த திராவிட மாடல் ஆட்சி நூற்றாண்டை நாம் கொண்டாடுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சூழலில் பேரறிஞர் அண்ணாவை நினைவு கொள்கிறேன். சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசுகிறார். ‘ஓராண்டிற்குமுன் ஆட்சிக்கு வந்தேன். தாய் திருநாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் மாற்றம், பல முக்கிய மான காரியங்களைச் செய்திருக்கிறேன். இதையெல்லாம் பார்த்தவர்கள் சிலருக்கு கோபமும் ஆத்திரமும் வருகிறது. இவர்களை விட்டுவைக்கலாமா ஆட்சியை களைக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். முடியுமா என்று சவால் விடமாட்டேன், உங்களால் முடியும். ஆனால், ஆட்சியைக் களைத்துவிட்டு, வேறுறொருவர் இங்கு வந்து உட்கார்ந்தால், திரு. அண்ணாதுரை அவர்கள் கொண்டுவந்ததையெல்லாம் மாற்றவேண்டுமென்று எண்ணும்போது மக்கள் வெகுகொண்டு எழுவார்கள் என்ற அச்சம் கூடவே வரும். அந்த அச்சம் இருக்கின்ற வரை இங்கே யார் ஆட்சி செய்தாலும் அண்ணாதுரை தான் ஆட்சி செய்கிறான் என்று பொருள்.’ (மேசையைத் தட்டும் ஒலி)

திட்டங்களை நிறுத்தினால் அச்சம் வரும்!

ஆம் தலைவர்களே! பல ஆண்டுகள் கடக்கலாம். ஆனால், இனிமேல் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை சமூக நீதி நாள் என்பதை மாற்ற நினைத்தால் அச்சம் வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளை சமத்துவ நாள் என்று கொண்டாடுவதை மாற்றினால் அச்சம் வரும். (மேசையைத் தட்டும் ஒலி) 20 இலட்சம் குழந்தைகளுக்கு வழங்கப்படும் காலை உணவுத் திட்டத்தை நிறுத்தினால் அச்சம் வரும். (மேசையைத் தட்டும் ஒலி) புதுமைப் பெண், தமிழ் புதல்வன் திட்டங்களை நிறுத்தினால் அச்சம் வரும். (மேசையைத் தட்டும் ஒலி) விடியல் பயணம் திட்டத்தை நிறுத்தினால் அச்சம் வரும். (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை நிறுத்தினால் அச்சம் வரும். நான் முதல்வன் திட்டத்தை நிறுத்தினால் அச்சம் வரும். ஏன், 2.5 கோடி மக்கள் பயன்பெறும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை நிறுத்தினால் அச்சம் வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அச்சம் இருக்கும் வரை இன்றும் என்றும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான் ஆட்சி செய்கிறார் என்று உலகம் பறைசாற்றும். (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்க்கட்சியினர் காதணி விழா நடத்தினார்கள். நீங்கள் காதணி விழாவினை தமிழ் நாட்டிற்கு கொடுத்துவிட்டீர்கள்; விழா கொண்டாடிவிட்டீர்கள். எப்போது கொண்டாடினீர்களென்றால், ‘India Today’ 7-12-2020 அன்று வெவ்வேறு மாநிலங்களை தரவரிசைப்படுத்தினார்கள். அந்தத் தரவரிசைப் பட்டியலில் 2020 ஆம் ஆண்டு, அதாவது அ.தி.மு.க. ஆட்சி முடிகின்ற தருவாயில் உள்கட்டமைப்பில் 20-வது இடம்; ஐந்தாண்டு செயல்பாட்டில் 19-வது இடம்; விவசாயத்தில் 19-வது இடம்; சுற்றுலாத் துறையில் 18-வது இடம்; உள்ளடக்கிய வளர்ச்சியில் 18-வது இடம்; தொழில்முனைவோர் முன்னேற்றத்தில் 14-வது இடம். ஆட்சி நிருவாகத்தில் 12-வது இடம்; தூய்மையில்

12-வது இடம்; சுகாதாரத் துறையில் 11-வது இடம். இது ‘India Today’ கொடுத்த ஆய்வறிக்கை.

பாலியல் குற்றங்களில் பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் முன்னிலை!

அதுதான் அ.தி.மு.க. ஆட்சி. அதே double digit, நாங்கள் 11.12 சதவிகிதம். அது தான் திராவிட மாடல் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்களும் 20-வது புள்ளியில் இருக்கிறோம், நாங்களும் 20-வது புள்ளியில் இருக்கிறோம். எதிர்க்கட்சியினருக்கு குறிப்பு வேண்டுமென்றால், வாருங்கள் ‘India Today’ ஆய்வறிக்கைக் கொடுக்கிறேன். நாங்களும் 20-வது புள்ளியில் இருக்கிறோம், எதில்

20-வது புள்ளியில் இருக்கிறோம் என்றால், National Crime Records Bureau அடிப்படையில் 2023-ல் தமிழ்நாடு 20-வது இடம். எதில் என்றால். பெண்கள் மீது பாலியல் குற்றங்களில் 20-வது இடம்.

முதல் 5 இடங்களில் யார் இருக்கிறார்கள் தெரியுமா? Double engine சர்க்கார். உத்தர பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் மத்தியபிரதேசம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாநிலங்கள் top 5. ஆனால், தமிழ்நாடு bottom 5-ல் இருக்கிறது.

முதல்வரின் ஆட்சியில் இன்றைக்கு வளர்ச்சி விழுக்காடு என்று பார்த்தால், ஒன்றிய அரசு வெளியிட்ட பொருளாதார ஆய்வறிக்கையாக இருக்கட்டும், Reserve Bank of India கொடுத்த Handbook of Statistics ஆக இருக்கட்டும், இன்றைக்கு தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் No.1, (மேசையைத் தட்டும் ஒலி) தொழில்முனைவோரில் No.1, (மேசையைத் தட்டும் ஒலி) export preparedness-ல் No.1, (மேசையைத் தட்டும் ஒலி) leather factory and shoe factory exports-ல் No.1. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, ஒன்றிய கொடுத்த உற்பத்தி துறையில் நாம் manufacturing sector-ல் 15 விழுக்காட்டில் No.1, அதிகமான வேலை வாய்ப்புக் கொடுப்பதில் No.1, வெளிநாட்டு முதலீடுகளில் No.1. அப்படியென்றால், No.1 State என்று நான் சொல்லவில்லை, ‘The Economist’ பத்திரிகை என்பது தமிழ்நாட்டை ‘Super State’ என்று ஆய்வை நமக்கு கொடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

எந்த சூழலில் இதை நாங்கள் செய்திருக்கிறோம். கணக்கை பற்றி சொல்லலாம் அண்ணா. எந்த சூழல் என்று சொல்கிறேன். 10 இலட்சம் கோடி ரூபாய் கடன் என்று சொல்கிறீர்கள். ஒவ்வொரு முறையும் முந்தைய ஆட்சிக் காலத்தின் சுமையை நாங்கள் தாங்கிக்கொள்கிறோம் என்று சொல்கிறோம். Correct-தான். அதுபோலதான் 7.5 விழுக்காடு குறித்தும். 7.5. விழுக்காடு இட ஒதுக்கீடு குறித்து காலையில் விவாதம் நடைபெற்றது. 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு எங்கிருந்து வந்தது என்று தெரியுமா உங்களுக்கு? 1996-2001 ஆம் ஆண்டுகளில் முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டுவந்த 15 சதவிகிதம் rural quota-லிருந்து வந்தது தான் 7.5 விழுக்காடு. கிட்டத்தட்ட 1 இலட்சம் மாணவர்கள் அந்த நேரத்தில் சமூக பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையை நான் காட்டுகிறேன். அப்போது 25 விழுக்காடாக யார் மாற்றினார்கள் என்பதும், Supreme Court-ல் நடைபெற்ற கதையும் உங்களுக்கு தெரியும்.

ஒன்றிய அரசின் பொருளாதார தாக்குதல்!

ஒரு நாடு மற்றொரு நாட்டின்மீது sanctions செய்யலாம். பொருளாதார தடை செய்யலாம். ஆனால், ஒன்றிய அரசு ஒரு மாநிலத்தில் தாக்குதல் செய்யலாமா? பொருளாதார தாக்குதல் செய்கிறார்கள். எந்த மாதிரியான பொருளாதார தாக்குதல் செய்கிறார்கள் என்பதை வரிசைப்படுத்துகிறோம். என்ன வரிசைப்படுத்துகிறோம் என்றால், இடைக்கால நிதிநிலை அறிக்கையில் அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அதாவது GST நிலுவை தொகையில் 9,600 கோடி ரூபாய் நமக்கு வரவேண்டியது நிலுவையில் இருக்கிறது. IGST-ல் settlement செய்யும்போது 1,700 கோடி ரூபாய் சுமையை நாம் தாங்கி விட்டோம். நிதி பகிர்வில் யதார்த்தமாக வருகிற social sector schemes வழியாக பணத்தைக் குறைத்து 1,200 கோடி ரூபாய் deficit-ல் இருக்கிறது. Samagra Shiksha Abhiyan-ல் 3,500 கோடி ரூபாய் கொடுக்கவில்லை, Jal Jeevan Mission-ல் 3,100 கோடி ரூபாய் கொடுக்கவில்லை, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வர வேண்டிய நிதி 2,500 கோடி ரூபாய் கொடுக்கவில்லை, இயற்கை பேரிடருக்காக 50,000 கோடி ரூபாய் கேட்டோம்; வெறும் 1,100 கோடி ரூபாய்தான் கொடுத்தார்கள். அதுமட்டுமல்ல, cess என்ற முறையில்-- உங்களுக்கும் சேர்த்துதான் பேசுகிறேன். Cess என்ற முறையில் கிட்டத்தட்ட மாநிலங்களுக்கு பகிரப்பட்ட நிதியை எடுத்து 23 விழுக்காடு மாநிலங்களுக்கு கொடுக்காத cess நிதியை கொண்டுபோய் அதற்குத் தேவையான நிதியுதவியாவது செய்திருக்கிறார்களா என்றால், இல்லை. சுகாதாரத் துறைக்கு ஒவ்வொரு முறையும் தனிநபர் வரி கட்டும்பொழுது 4 சதவிகிதம் cess கட்டுகிறார்கள். 4 விழுக்காடு cess வரியை ஒழுங்காக ஒன்றிய அரசு சுகாதாரத் துறை budget-ல் போட்டிருக்கிறதா என்றால், இல்லை. ஆனால், சுகாதாரத் துறையினுடைய budget அளவுகள் குறைந்து கொண்டே இருக்கிறது.

AIIMS இன்னும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள், இன்னும் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியென்றால் cess என்பது ஒரு ஊழல். Cess என்பது ஒன்றிய அரசு மாநிலத்திலிருந்து நிதி பகிர்வை, நிதி மேலாண்மையை, நிதி வளங்களை கொண்டுபோய் சேர்க்கிற விஷயம்தான். நமக்கு தொடர்ச்சியாக 16-வது நிதிக் குழு வருகிறபோது, முதலமைச்சர் அவர்கள் cess வரியை அகற்றுங்கள் என்று சொன்னார்கள், அவர்கள் கேட்கவில்லை. 50 விழுக்காடு நிதியை மாநிலங்களுக்கு பகிர வேண்டுமென்று கேட்டார், அவர்கள் கேட்கவில்லை. வளர்கிற மாநிலங்களை ஏன் தண்டிக்கிறீர்கள்? என்று அளவுகோல் போட்டு கேட்டார், ஆனால் கொடுக்கவில்லை. பிரித்தாளும் சூழ்ச்சியை செய்திருக்கிறார்கள். என்ன பிரித்தாளும் சூழ்ச்சி என்றால், அண்டைய மாநிலமான கேரளாவிற்கு 23 விழுக்காடு அதிகமான நிதி ஒதுக்கீடு, கர்நாடகாவிற்கு 14 விழுக்காடு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாட்டிற்கு 0.44 விழுக்காடு மட்டும் தான் அதிகப்படுத்தியிருக்கிறார்கள்.

இதுதான் நம்மீது நடத்துகிற பொருளாதார தாக்குதல்- Economic sanction. இந்த பொருளாதார நெருக்கடி நிலையிலும் நம் முதல்வர் அவர்கள் நிதி மேலாண்மையில் திட்டங்களை வகுத்துக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு Fiscal Responsibility Management Act-ல் 3.5 விழுக்காட்டிற்குக் கீழே கொண்டுவந்து அடுத்த வருடத்திற்குள் 3 விழுக்காடாக குறையும் என்ற நம்பிக்கையை இந்த நிதிநிலை அறிக்கை கொடுத்திருக்கிறது. அப்படியானால் தீர்வு என்ன? தீர்வு என்னவென்றால், அதற்கான தீர்வை இன்றைக்கு காலையில் முதல்வர் அவர்கள் கொடுத்தார்கள். என்ன தீர்வு என்றால், உண்மையான மாநில சுயாட்சி அமைய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியும், சுகாதாரமும் மாநில பட்டியலுக்கு வர வேண்டும். பொருளாதார சுய நிர்ணயம் வேண்டுமென்று ஒரு அருமையான ஆய்வறிக்கையை இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் காணிக்கையாக செலுத்தினார்கள்.

ஆயிரம் விளக்கு தொகுதியில் நிறைவேற்றிய திட்டங்கள்!

சட்டமன்ற நடவடிக்கைகளின்போது ஒவ்வொரு முறையும் நாம் தொகுதி சார்பாக கோரிக்கை வைப்போம், அது இயல்பு. ஆனால், நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், ஆயிரம் விளக்கு தொகுதியில் பல திட்டங்களைத் தீட்டி தமிழ் நாட்டு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக நகராட்சி நிர்வாகத் துறையைப் பார்த்தீர்களென்றால், 30 கிலோ மீட்டர் அளவுக்கு storm water drains, கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் அளவுக்கு கழிவுநீர்க் கால்வாய் மாற்றி 3 pumping stations அமைத்திருக்கிறோம். ஆயிரம் புதிய குடியிருப்பு வீடுகள் கட்டி முடித்திருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் வருகிற 2 ஆம் தேதி திறந்து வைக்கிறார்கள். சர்வதேச Boxing stadium நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, 7 Gym கட்டி முடித்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, இன்றைக்கு கலைஞர் நூற்றாண்டு பூங்கா, புதுப்பொலிவுடன் அண்ணா மேம்பாலம், புதுப்பொலிவுடன் வள்ளுவர் கோட்டம் என்று 550 பணிகளை நிறைவு செய்து அந்தப் பணிகளை சட்டமன்றக் குறிப்பில் ஏற்றித் தருமாறு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை நான் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டப்பேரவைக்கு அஞ்சலையம்மாள் பேத்தி வருகை!

சட்டப்பேரவைக்கு கடலூர் அஞ்சலையம்மாவினுடைய பேத்தி வந்திருக்கிறார்கள். அவர்கள் முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள். ஏனென்றால், கடலூர் அஞ்சலையம்மாவுக்கு சிலை வைத்ததற்காகவும், கடலூரில் தனி விடுமுறை கொடுத்ததற்காகவும், Anna Centenary Library போல கடலூரில் அஞ்சலையம்மாள் பெயரில் ஒரு நூலகம் கட்டியதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறார்கள். அவர்கள் குடும்பம் சார்பாக நானும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக மாபெரும் தமிழ்க் கனவு கண்டார் நம் பேரறிஞர் அண்ணா. அதாவது, தொன்மையான வரலாறு தமிழர்களுக்கு இருக்கிறது. அதேநேரத்தில் நவீனத் தன்மையோடு தமிழர்கள் வளம்பெற வேண்டும், யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று. ஆமாம், கீழடியும், பொருநையும் உருவாக்கி வருங்கால இளைஞர்கள், மாணவர்களிடம் செயற்கை நுண்ணறிவு கொடுத்த laptop வழங்கியவர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மைதான். நீங்கள் குலவிளக்கு என்று சொல்லலாம். ஆனால், நாங்கள் உரிமைத் தொகை என்று சொல்வோம். நீங்கள் தாலிக்குத் தங்கம் என்று சொல்லலாம். ஆனால், தாலி அடிமை சின்னம் அகற்றிய மூவலூர் இராமாமிர்தம் புதுமைப் பெண் திட்டம் ஆட்கள் நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் கீழடி, பொருநை நாகரிகம் என்று சொல்லலாம். தெர்மோகோல் அ.தி.மு.க. ஆட்சி என்று நாங்கள் சொல்வோம் என்று சொல்லி, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது)

இவ்வாறு டாக்டர் நா.எழிலன் உரையாற்றினார்.

சைதை மேற்கு பகுதி தி.மு.க செயலாளர்
10 வது மண்டலக்குழுத் தலைவர் – பெருநகர சென்னை மாநகராட்சி

எம்.கிருஷ்ணமூர்த்தி MC அவர்களின்

இல்லத் திருமண விழா!

மணமக்கள்: K.விஜய்கிரண் B.Com.,MBA., G.கீர்த்தனா B.V.A.,

தலைமையேற்று நடத்தி வைக்க வருகை தரும்
இந்தியாவின் முன்மாதிரி முதல்வர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களையும்
தமிழ்நாடு துணை முதலமைச்சர்
மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
மாண்புமிகு மா.சுப்பிரமணியன் B.A,LLB.,
சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
அவர்களையும்

மற்றும் தலைமை கழக நிர்வாகிகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக-ஒன்றிய கழக செயலாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், கழக முன்னணியினர், தோழமைக் கட்சியினர் மற்றும் ஆன்றோர் சான்றோர், உற்றார் உறவினர்கள் அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்.

மணநாள்: 20.02.2026 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 9.00-10.30 மணிக்குள் வரவேற்பு: மாலை 6.00 மணிக்குமேல்
இடம்: காமராஜர் அரங்கம், அண்ணாசாலை, தேனாம்பேட்டை

Santhosh designs 99401 80492

அன்புடன்: எப்.சாகுல் அமீது
வட்ட துணைச் செயலாளர்

142 வது வட்ட தி.மு.க - சைதை மேற்கு பகுதி